# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 21 வியாழக்கிழமை (03-04-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 127


# கொழும்பு - பலாலி விமான சேவை

# திங்கள் தொடக்கம் அதிகரிக்கப்படும்!

## வாரத்தில் மூன்று நாள்கள் இரண்டு இருவழிச் சேவைகள்

கொழும்பு, ஏப்ரல் 3

வடபகுதிப் பயணிகளின் போக்குவரத்துக் கஷ்டங்களை நீக்கும் வழிவகைகளில் ஒன்றாக, கொழும்பு - பலாலி பயணிகள் விமானச் சேவைகள் அதிகரிக்கப்படவுள்ளன.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் இரண்டு தடவைகள் இருவழிச் சேவைகளை நடத்துவதற்கு முடிவாகியுள்ளது.

குடாநாட்டு மக்களின் கப்பல், விமானப் போக்குவரத்துக் கஷ்டங்கள், தாமதங்கள் குறித்து ஆராய்வதற்காக பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் இதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா தலைமையில் மேற்படி மாநாடு நடைபெற்றது. உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள், விமானப் போக்குவரத்து முகவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஈ. பி. டி. பி. கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்ட

(7 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் மட்டுமே தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை

### அமைச்சர் ஒருவர் தகவல்

கொழும்பு, ஏப். 3

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்தக் கூடிய பாதுகாப்பு உத்தரவாதம் இல்லை. ஆகையால் வடமாகாணத்தில் மட்டும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

அமைச்சர் ஒருவர் மேற்கண்டவாறு தகவல் வெளியிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான கால எல்லை அடுத்த வருடம் மார்ச் மாதமே முடிவடைகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதே நேரம்—

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாரீஸ் மாநாட்டைக்கருதியே வடக்கு தேர்தல் அறிவிப்பு

### புலிகளின் லண்டன் பிரதிநிதி கருத்து

லண்டன், ஏப். 3

இம்மாத இறுதியில் பாரிஸில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கையில், குறிப்பாக வடக்கு—கிழக்கில் அமைதி நிலவுவதாகக் காட்டுவதற்காகவே —

ஸ்ரீலங்கா அரசாங்கம் வடக்கு — கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தப் போவதாக விடுத்துள்ள அறிவித்தலாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் லண்டன் பிரதிநிதி அன்ரன்ராஜா இவ்வாறு கருத்து வெளியிட்டிருப்பதாக செய்தி ஏஜன்சி ஒன்று தெரிவித்தது.

அரசின் வடக்கு — கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்புக் குறித்து அவர் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவின் கூட்டம் இம்மாத இறுதியில் பாரிஸில் நடைபெறவுள்ளது. அக்கூட்டத்தில் நிதி உதவி பெறுவதற்கு இலங்கையில், குறிப்பாக வடக்கு — கிழக்கில் அமைதி நிலவுவதாகக் காட்ட வேண்டியுள்ளது.

அமைதி நிலவுவதாகக் காட்டுவதற்குக் கையாளப்படும் முயற்சியே இது.

இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள வடக்கு — கிழக்கில் தேர்தலை நடத்துவது என்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இ. தொ. கா. செயற்குழுக் கூட்டத்தில் தொண்டா மீது பலத்த கண்டனம்

### ஆறுமுகம் தொண்டமான் ராஜினாமா பயமுறுத்தல்

கொழும்பு, ஏப். 3

கடந்த ஞாயிறு கூட்டப்பட்ட இலங்கை தொழிலாளர்காங்கிரஸின் செயற்குழுக் கூட்டத்தில் இ. தொ. கா. தலைவர் தொண்டமானும் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமானும் பலத்த கண்டனங்களுக்குள்ளானார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்டனங்கள் காரசாரமான விவாதங்களாக மாறி உச்சக் கட்டத்தை அடைந்த போது, செயலாளர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யப் போவதாக ஆறுமுகம் தொண்டமான் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்தார்.

அப்பொழுது பிரச்சினை

(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



அப்ப கிழக்கைக் கைவிடுகிற நோக்கமோ...!

## 4 கப்பல்களில் 1,125 பேர் இன்று பயணம்

யாழ்ப்பாணம், ஏப். 3

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு இன்று நான்கு கப்பல்களில் ஆயிரத்து 125 பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 203 முதல் 559 வரையுள்ளவர்களை இன்று காலை 7.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

நாளை 500 பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கடற்புலிகள் - கடற்படையினர் ஊர்காவற்றுறை கடலில் மோதல்

கொழும்பு, ஏப். 3

ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையிலான கடற்பரப்பில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதலின் போது கடற்படையினருக்குச் சொந்தமான தாக்குதல் படகு ஒன்று சிறிது சேதம் அடைந்தது என்றும்—

புலிகளின் நான்கு படகுகள் அழிக்கப்பட்டதாகவும்— பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

இந்த மோதலில் 15 புலிகள் கொல்லப்பட்டதாகவும் அது தெரிவித்தது. (இ-4)

## 2 சடலங்கள் கொழும்பு வந்தன

கொழும்பு, ஏப்.3

அண்மையில் காணாமற் போன எம். ஐ - 24 ரக ஹெலிக்கொப்டரில் இருந்த விமானப்படையினரின் சடலங்கள் என நம்பப்படும் இரு சடலங்கள் இந்தியாவில் இருந்து விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு விமானப்படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

நாகபட்டினம் கடற்பகுதியில் இந்தச் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று ஏற்கனவே செய்திகள் வெளிவந்திருந்தன.

சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் காணாமற் போன ஹெலிக்கொப்டர் குறித்து மேலதிக விசாரணை நடத்த உதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## விடுதலையானோரில் அறுவர் நாளை கப்பல் மூலம் வருவர்

யாழ்ப்பாணம், ஏப். 3

கடந்த 31ஆம் திகதி அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலையான 7 பேரில் 6 பேரை கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அழைத்து வர ஈ.பி.டி.பி. அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. விடுதலையான மற்றையவர் திருகோணமலையைச் சேர்ந்தவர்.

அநுராதபுரத்தில் இருந்து இவர்களை அழைத்துச் சென்று திருகோணமலையில் உள்ள தமது அலுவலகத்தில் தங்க வைத்து பராமரித்து வரும் ஈ.பி.டி.பி. அமைப்பினர் இவர்களில் 6 பேரை நாளை காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும் கப்பலில் அழைத்து வந்து உறவினர்களிடம் ஒப்படைக்கவுள்ளனர்.

விடுதலையான 7 பேரின் விவரம் வருமாறு:-

★ தங்கமயில் கிருபாகரன் (20 வயது—மிருசுவில்). இவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## லோகேஸ்வரன் சுரேஸ்காந்தன்
(சுரேஸ்)

கொழும்புத்துறை A. V. றோட்டைச் சேர்ந்த லோகேஸ்வரன் சுரேஸ்காந்தன் வன்னியில் 18 - 03 - 1997 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற லோகேஸ்வரன் (கார்ச் சாரதி) மற்றும் இராசாத்தி ஆகியோரின் அன்பு மகனும், இராஜகாந்தன் (ரமேஸ்), ராதாயினி (ராதா) விமலகாந்தன், ஜெயகாந்தன், தயாயினி, உதயகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19 - 03 - 1997 முழங்காவில், நாகபடுவானில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தவராசர
(மாமனார்)
(புஸ்பா ரயர் வேக்ஸ்)

இல. 11, சென் மேரிஸ்,
2 ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

(46131)

## தேவசகாயம் அந்தோனிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற சுங்கத்திணைக்கள உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம், பிரதான வீதி, 408 இலக்கத்தை (பிறதர் வளவு) சொந்த இடமாகவும், தற்பொழுது இடம் பெயர்ந்து கிளிநொச்சி, தர்மபுரத்தில் வசித்தவருமாகிய தே. அந்தோனிப்பிள்ளை 21-03-97 வெள்ளிக்கிழமை அன்று தர்மபுரத்தில் காலமாகிவிட்டார்.

இவர் ஜெயராணியின் அன்புக் கணவரும், இந்திரா, சுதர்சன், சுகான், ஜீன் சுகந்திரா, சுகிதரன், பேபி, அஜித் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மரியாம்பிள்ளை, அழகம்மா, நீக்கிலஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் கிளிநொச்சி தர்மபுரத்தில் நடைபெற்றன.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
சி. பி. ம. ஆரோக்கிய நாதர்.

(46126)

## வல்லிபுரம் சின்னையா

சாவகச்சேரி, சங்கத்தானை பிரசித்த நொத்தாரிசும், முன்னாள் சாவகச்சேரி பட்டினசபை உபதலைவரும், முன்னாள் சங்கத்தானை இத்தியடி வீரகத்திப்பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவு மாகிய வல்லிபுரம் சின்னையா அவர்கள் 27-3-97 இல் சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற பவளத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னம்மா, பொன்னம்மா ஆகியோரின் சகோதரரும், வல்லிபுரநாதன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இராமநாதன் M.Sc. (பொறியியலாளர், சிங்கப்பூர்), யோகராசா (படவரைஞர், கொழும்பு), விஸ்வநாதன் (நில அளவையாளர், கொழும்பு), சந்திரலேகா, கிருஸ்ணநாதன் (கணக்காளர், நைஜீரியா), பாக்கியலட்சுமி (ஆயுர்வேதப் பட்டதாரி), சண்முகநாதன் B.Sc. (பொறியியலாளர், சிங்கப்பூர்), சுமங்கலராணி B.Com. (ஆசிரியை, கொழும்பு), சோதிநாதன் (T.A), பாலநாதன் B.Sc. (T.A, நீர்வளசபை, கொழும்பு), கருணைநாதன் (U.K), குகநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஈஸ்வரதாசன் (நிறைவேற்று ஆணை வழங்குநர் மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி), சக்திதாசன் B.Sc. (பொறியியலாளர், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை), முத்துரமணிதரன் (இலிகிதர், பனைவள அபிவிருத்திச்சபை, கொழும்பு), தம்பையா, நமசிவாயம் (நில அளவையாளர்), ஞானேஸ்வரி, பராசக்தி, காஞ்சனா, மங்களேஸ்வரி, வடிவழகி, அமிர்தவல்லி, கல்பனா, சுகந்தா B.Com, இரத்தினரதி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-4-97) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஈஸ்வரதாசன்
(மருமகன்)

சங்கத்தானை,
சாவகச்சேரி.

(46144)

## மாணிக்கம் ஜெகதீசன்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் ஜெகதீசன் 22 - 3 - 97 லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மாணிக்கம் (மலாயன் பென்ஷனர்) திருமதி நவமணி மாணிக்கத்தின் மூத்த அன்புப் புதல்வனும், கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பையா, திருமதி ப. சுப்பையா அவர்களின் அன்பு மருமகனும், மிருதாளினியின் அன்புக் கணவரும், செல்வி யோகேஸ்வரி காலஞ்சென்ற ஜெகதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கெங்காதேவி, ரகுநாதன் ஆகியோரின் மைத்துனரும், சீத்தாமோகன் வாகீசன், வித்தியதீபன், பிரசாதினி ஆகியோரின் அன்புப் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27-3-97 இல் லண்டனில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யோகேஸ்வரி
(பிள்ளை அக்கா)

(46145)

## சமய சந்நிதிகளில்

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிமுதல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 21 தினங்கள் உற்சவம் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

நீர்வேலி தெற்கு ஒல்லை வேம்படி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த மணவாளக் கோலத் திருவிழா இன்று காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது (ஐ-30)

★ ★ ★

கோயிலாக்கண்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமானது. இறுதி நாளான எதிர்வரும் 8 ஆம் திகதி காலை சங்காபிஷேகமும் தொடர்ந்து சுவாமி வீதியுலாவும் இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு புங்கன்குளம் வில்லையம்பதி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய அலங்கார உற்சவ பூர்த்தி இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் நடைபெறும். (ஐ-30)

## விளையாட்டுப் போட்டி நாளை

இன்று ஆரம்பமாகவிருந்த வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்ட பாடசாலைகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சிறார்கள் பொதுமக்களுக்கான —விளையாட்டு விழா நாளை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது.

நாளை பிற்பகல் 1 மணி முதலும், நாளை மறுதினமும் ஞாயிறன்றும் காலை, மாலை இருநேரமும் மண்கும்பான் விளையாட்டு மைதானத்தில் இந்த விளையாட்டு விழா நடைபெறும்.

நாளைமறுதினமும் ஞாயிற்றுக்கிழமையன்றும் காலை 7 மணிக்கு சைக்கிளோட்டம் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகள் ஆகியவை நடைபெறும். (உ)


## பொஸ்கோ இன்ஸ்ரிரியூட்
**25, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.**

அடிப்படை சிங்கள வகுப்பு

இலகுவான முறை, பேச, எழுத, வாசிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும்.

**ஆரம்பம்: 04 - 04 - 97**
திங்கள், வெள்ளி பிற்பகல் 4.00 மணி (46140)

## 'ரவி ஒளிகானம்'
**ORIGINAL**
பிரதிகளின் வெளியீடு

(1) மின்சாரக் கனவு
(2) அரவிந்தன்
(3) மாப்பிள்ளை கவுண்டர்
(4) விவசாயிமகன்
(5) மோகமுள்
(6) வெற்றிமுகம்

இவையனைத் தினதும் வீடியோ கசட்டும் ஒறிஜினல் பிரதியாகவுள்ளன.
மற்றும்
அருணாசலம்
சிஷ்யா, சூர்யவம்சம், பூமகள் ஊர்வலம், வசந்தம் வந்தாச்சு ஆகியன ஒடியோ டிஸ்க் [illegible]
[illegible]
(சி/422)

## மலிவு விற்பனை

★ பிஸ்கட் வகைகள்
★ கர்(F)போம் பிறசியர்
★ சில்வர் சீல்ட் சொக்ஸ் வகைகள்
★ புடைவை வகைகள்

மொத்தமாக மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

**சிறி முருகன்**
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(46143)

## யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.

கல்வித் திணைக்கள
முறைசாராக் கல்விப் பிரிவினால்
பின்வரும் பாடநெறி நடத்தப்படும்.

தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து

| | | |
|---|---|---|
| விண்ணப்பப் முடிவு திகதி: | 10 - 04 - 1997 | (வியாழன்) |
| நேர்முகப் பரீட்சை: | 11 - 04 - 1997 | (வெள்ளி) |
| பயிற்சிகள் ஆரம்பம்: | 16 - 04 - 1997 | (புதன்) |

விணணப்ப படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

- அதிபர்.

(46142)


## கண்ணீர் அஞ்சலி

ஆலமரம் சாய்ந்ததுவோ!
ஐயகோ அதில் ஆறிய
குருவிகள் தான் .........?

அருட்தந்தை
**ச. கில்லரி ஜெபநேசன் அடிகளாரின்**

மறைவுச் செய்தி எம்மையெல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. இவரது ஆன்மா இறைபதம் சேர இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**புனித ஆரோக்கியநாதர் ஆலய மேய்ப்பு பணி சபையும், பங்கு மக்களும்.**

(46136)

# மரண அறிவித்தல்கள்

## சிவராமலிங்கம் செல்வக்குமார்
(பகுதி நேர ஆங்கில ஆசிரியர்)

கொடிகாமத்தைச் சேர்ந்த அமரர் எஸ். ஆர். எஸ். சிவராமலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வர் செல்வக்குமார் 02-04-97 அன்று காலமானார்.

இவர் செல்வமலரின் (வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும், விஸ்வலிங்கம் தங்கம்மாவின் மருமகனும், தேவகுமார், ராஜகுமார் (குகன் ஸ்ருடியோ, சாவகச்சேரி), சாந்தகுமார் அகியோரின் அன்புச் சகோதரரும், இராசபூபதி, மகேஸ்வரி, காலஞ்சென்ற சிவகுருநாதன், அருளம்மா, நேசம்மா, தில்லைநாதன் (U.K), யோகநாதன் (கல்வி அமைச்சு, மாகாணசபை), தம்பிநாதன் (சவூதி), செல்வராணி (பதிவாளர், கொழும்பு), சிவநாதன் (தொலைத் தொடர்புத்திணைக்களம், வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
செ. செல்வமலர் (மனைவி)

(9464)

## திருமதி பவளம் சிவசுப்பிரமணியம்

(அனித்தா பாடசாலை அதிபர், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூட்டுறவுச் சங்க உடைத்தயாரிப்பு நிலையத்தின் முன்னாள் மேற்பார்வையாளர்)

யாழ். வண்ணார்பண்ணை பூனாறிமரத்தடியைச் சேர்ந்த திருமதி பவளம் சிவசுப்பிரமணியம் அவர்கள் 02-04-97 அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கி. சிவசுப்பிரமணியம் (ஆசிரிய ஆலோசகர்) அவர்களின் அன்பு மனைவியும், கிரிசாந்தி (ரஷ்யா), அனித்தா (யாழ். பல்கலைக்கழகம், விஞ்ஞானபீடம் 2ஆம் ஆண்டு), கோகுலன் (கோபி, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகுதாயாரும், திருமதி த. பரமேஸ்வரி (நோர்வே) து. விஜயரெட்ணம், திருமதி த. தையல்நாயகி, திருமதி இ. சறோஜினி, து. மகாலிங்கம் (Mini), து. பாலறஞ்சித் (U.K), து. றஞ்சித்குமார் (ஜப்பான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. கோகுலன் (மகன்)
(கோபி)

அனித்தா பாடசாலை,
பூனாறிமரத்தடி, கொக்குவில்.

(46146)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச நூலகம்

# பாகிஸ்தானில் பெரும் அரசமைப்பு மாற்றம்

## ஜனாதிபதியின் அதிகாரங்கள் பறிப்பு

இஸ்லாமாபாத், ஏப். 3

பாகிஸ்தானில் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தை பதவியில் இருந்து நீக்க ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தை அரசமைப்பில் இருந்து நீக்கிவிடும் மசோதா நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானில் நீண்ட காலம் அமுலில் இருந்த இராணுவ ஆட்சியின் இறுதியில் — 1985 ஆம் ஆண்டில் — அறிமுகப்படுத்தப்பட்ட இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைப் பதவியில் இருந்து ஜனாதிபதி அடிக்கடி தூக்கி எறிய முடிந்தது.

இந்த அரசியல் சட்டத் திருத்தம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசுகளைக் கலைக்கவும், முப்படைத் தலைமைத் தளபதிகளை நியமிக்கவும், மாகாண ஆளுநர்களை நியமிக்கவும் ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்களைப் பறித்து அந்த அதிகாரங்களைப் பிரதமருக்கு வழங்கியுள்ளது.

நாடாளுமன்றத்தின் முதன்மையை நிலை நாட்டுவதே இந்தச் சட்டத் திருத்தத்தின் நோக்கம் என்று தெரிவித்த நவாஷ் ஷெரிப் இந்தச் சட்டத்திருத்தம் நிறைவேற முழு ஆதரவை வழங்கிய முன்னாள் பிரதமர் திருமதி பெனாஷிர் பூட்டோவுக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

சுதந்திரம் பெற்ற 50 ஆவது ஆண்டு நிறைவில் இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும் என்று அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் தெரிவித்தனர்.

பாகிஸ்தானில் கடந்த 10 ஆண்டு காலத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையேயான மோதல்கள் நீடித்து வந்தன. இக்காலப் பகுதியில் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட 4 அரசாங்கங்கள் ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டன. [ஐ-10]

★ தேவகௌடாவையே எதிர்க்கிறோம்:

## மூப்பனாரை பிரதமராக ஏற்கவும் நாம் தயார்!

### சீதாராம் கேசரி தெரிவிப்பு



மூப்பனார்

புதுடில்லி, ஏப். 03

இந்தியாவில் ஆளும் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் மாநில காங்கிரஸின் தலைவர் ஜீ. கே. மூப்பனாரை பிரதமராகக் கொண்டு அமைக்கப்படும் அரசுக்கு ஆதரவு வழங்கத் தயார் என்று இந்திய தேசிய காங்கிரஸின் தலைவர் சீதாராம் கேசரி தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் திரு. கேசரி இதனைத் தெரிவித்தார்.

தேவகௌடாவை மட்டுமே தாம் எதிர்ப்பதாகவும், அவரது இடத்துக்கு வேறு ஒருவர் நியமிக்கப்பட்டால் தாம் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாகவும் அப்பேட்டியில் சீதாராம் கேசரி கூறியதாக புதுடில்லியில் இருந்து நேற்று நண்பகல் வெளியான செய்திகள் தெரிவித்தன.

த.மா. காங்கிரஸின் தலைவர் ஜீ.கே. மூப்பனாரை பிரதமராக ஏற்கத் தாம் தயார் என்பதை அப்பேட்டியில் சீதாராம் கேசரி அடிக்கடி சூசகமாகத் தெரிவித்தார் — என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை

தேவகௌடாவுக்குப் பதிலாக புதிய பிரதமரைத் தெரிவு செய்யப் போவதில்லை என்றும் —

புதிதாகத் தேர்தலைச் சந்திக்கவும் ஐக்கிய முன்னணி தயாராக இருப்பதாகவும் அதன் வழிகாட்டல் குழு தெரிவித்துள்ளது. (ஐ)

தி.மு.க., தெலுங்கு தேசம், அஸாம் கணபரிஷத் ஆகிய

## முக்கிய 3 பிராந்தியக் கட்சிகளும் தேர்தலை நடத்தக் கோருகின்றன

புதுடில்லி, ஏப். 3

இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் ஆளும் ஐக்கிய முன்னணியும், இந்திய தேசிய காங்கிரஸும் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வரும் வேளையில் —

மத்தியில் காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசாங்கம் ஒன்றுக்கு தாம் ஒருபோதுமே ஆதரவளிக்கப் போவதில்லை என்று ஐக்கிய முன்னணியில் இடம்பெறும் முக்கிய மூன்று பிராந்தியக் கட்சிகளின் முதலமைச்சர்களும் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

ஐக்கிய முன்னணியில் இடம்பெறும் முக்கிய மூன்று பிராந்தியக் கட்சிகள் ஆட்சியில் உள்ள தமிழ்நாடு, அஸாம், ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்களின் முதலமைச்சர்களுமே கூட்டாக புதுடில்லியில் இதனை அறிவித்தனர்.

காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமைக்கப்படுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை எனத் தெரிவித்த இவர்கள் புதிதாகத் தேர்தல்களை நடத்துவதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகம், தெலுங்கு தேசம் கட்சி, அஸாம் கணபரிஷத் ஆகிய இந்த மூன்று பிரதான கட்சிகளும் பிரதமர் தேவகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசின் நாடாளுமன்றத்தில் 40 உறுப்பினர்களைக் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை — பதவியைக் காப்பாற்றும் நோக்குடன் பிரதமர் தேவகௌடா பாரதீய ஜனதாக் கட்சியின் ஆதரவைத் திரட்டுவதற்கு முயற்சித்து வருகிறார் என்று இந்திய தேசிய காங்கிரஸின் தலைவர் சீதாராம் கேசரி குற்றஞ்சாட்டியுள்ளார்.

சீதாராம் கேசரியின் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று பிரதமர் தேவகௌடா தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை — ஐக்கிய முன்னணித் தலைவர்களுக்கும், காங்கிரஸ் தலைவர்களுக்குமிடையே உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

### தென்கொரியா நடவடிக்கை

சோல், ஏப். 3

வடகொரிய- தென்கொரிய நாடுகளுக்கிடையே நடத்தப்படும் அமைதிப் பேச்சுக்களுக்கு ஊக்கம் தரும் வகையில் வடகொரியாவுக்கு தனியார் அமைப்புக்கள் அரிசியை ஏற்றுமதி செய்வதற்கு தென்கொரிய அரசு அனுமதிவழங்கவுள்ளது. (இ-10)

### 26 பேர் பலி!

அளவுக்கதிகமான பயணிகளுடன் சென்று கொண்டிருந்த ரயில் ஸ்பெயினில் கடந்த திங்களன்று தடம் புரண்டதில் 26 பேர்கள் பலியாகினர். 80 பேர் காயமடைந்தனர். (இ)

பெண்களுக்கு எதிரான

## தலிபானின் நடவடிக்கைகளுக்கு ஐ. நா. அமைப்புகள் கண்டனம்!

### உலக அரங்கில்

ஜெனிவா, ஏப். 3

ஆப்கானிஸ்தானில் பெண்கள் சமுதாயத்தின் உரிமைகளை காட்டுமிராண்டித்தனமாக நசுக்கிவரும் 'தலிபான்' குழுவின் வரம்புமீறிய அராஜகங்கள் குறித்து யுனிசெவ், யு.என்.எச்.சி.ஆர் போன்ற ஐக்கிய நாடுகள் சபை அமைப்புகள் கடும் கண்டனக் குரல்களை எழுப்பியுள்ளன.

பொதுவாழ்விலிருந்து பெண்களை முற்றிலுமாக அகற்றியுள்ள 'தலிபான்' குழுவின் செயல் அப்பட்டமான மனித உரிமை மீறல் என்பதோடு நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அது பெரும் குந்தகத்தை விளைவிக்கப்போகிறது என 'யுனிசெவ்' இயக்குநர் ஹரோல்ட் பெல்லாமி தனது அறிக்கையில் எச்சரித்துள்ளார்.

தொடர்ந்து இடம்பெறும் உள்நாட்டுப் போர் காரணமாக ஆப்கானிஸ்தான் ஒரு விதவைகளின் நாடாக மாறி வருகிறது. பல குடும்பங்களின் வாழ்க்கை பெண்களின் உழைப்பிலேயே தங்கியுள்ளது. பெண்கள் வேலைக்குச் செல்லக் கூடாது என்ற 'தலிபான்' குழுவின் உத்தரவினால் பல குடும்பங்களின் எதிர்காலமே கேள்விக் குறியாக மாறிவருகிறது எனக் காட்டமாகக் கூறியுள்ளார் ஹரோல்ட் பெல்லாமி. (ஐ-10)

### மேற்காசிய நிலைவரம்

## இஸ்ரேல் - எகிப்து தலைவர்கள் ஒருவர் மீது ஒருவர் பாய்ச்சல்!

ரெல்அவிவ், ஏப். 3

மேற்கு ஆசிய சமாதான முயற்சியில் எழுந்துள்ள தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு இஸ்ரேலிய மற்றும் எகிப்திய தலைவர்கள் மாறி மாறி ஒருவர் மீது ஒருவர் குற்றஞ் சாட்டிவருகின்றனர்.

20 ஆண்டுகளில் இப்போதுதான் இஸ்ரேலுக்கும் அரேபியர்களுக்கும் இடையிலான உறவு மோசமான கட்டத்தை அடைந்துள்ளது என எகிப்திய அதிபர் ஹொஸ்னி முபாரக் தெரிவித்திருக்கிறார்.

''பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகுவின் வார்த்தையை ஒரேயொரு தடவையாவது நம்ப விரும்புகிறேன்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''எகிப்து என்னைக் களங்கப்படுத்துகிறது; இஸ்ரேலுக்கு எதிராக அரபு உலகை ஒன்று திரட்டுவதில் முபாரக் தலைமையிலான எகிப்திய அரசு விளையாடிக் கொண்டிருக்கிறது'' — என்று பிரதமர் நத்தனியாகு கடுமையான தொனியில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கெய்ரோவில் கூடிய அரேபிய வெளிவிவகார அமைச்சர்கள், இஸ்ரேலுடன் இயல்பான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியைக் கைவிடுவதென்றும் இஸ்ரேல் மீது பொருளாதாரத்தடை ஒன்றைக் கொண்டுவரவும் இணங்கியதை அடுத்து இந்தக் காரசாரமான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றுள்ளன. (ஐ)

## காஸா குண்டு வெடிப்பு; சூத்திரதாரிகள் யார்?

மேற்குக்கரை, ஏப். 3

பலஸ்தீன நிர்வாகத்தின் கீழ் உள்ள காஸா துண்டு நிலப்பரப்பில் உள்ள யூதக் குடியிருப்பு பகுதிகளில் இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இக்குண்டு வெடிப்புகள் தொடர்பாக குழப்ப நிலை நிலவுகிறது. இத்தாக்குதல்களை நடத்தியது யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இஸ்ரேலியப் பள்ளி மாணவர்களின் பஸ் வண்டிகள் இரண்டை இலக்கு வைத்தே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாகவும் —

பலஸ்தீனியப் பொலீஸாரின் சீருடையில் இருந்த இரண்டு தற்கொலையாளிகள் இத்தாக்குதல்களின் போது கொல்லப்பட்டிருப்பதாகவும் — இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இக்குண்டு வெடிப்புக்களினால் இஸ்ரேலியர்கள் எவரும் பாதிக்கப்படவில்லை. எனினும் அப்பகுதியில் நின்ற பலஸ்தீனியர்கள் காயமடைந்துள்ளனர்.

வழமையாக இது போன்ற தாக்குதல்களை நடத்தும் இஸ்லாமியத் தீவிரவாத இயக்கமான 'ஹமாஸ்' இயக்கம் இத்தாக்குதல்களுக்குத் தாம் பொறுப்பல்ல என்று மறுத்துள்ளது.

இஸ்ரேலியர்களே இக்குண்டுத் தாக்குதல்களை நடத்தியதாகப் பலஸ்தீன நிர்வாகம் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஐ)

## வன்செயல்கள் தொடருகின்றன; மேலும் இரு பலஸ்தீனியர்கள் பலி!

மேற்குக்கரை, ஏப். 3

காஸா பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து மேற்குக் கரைப் பகுதியில் இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனியர்களுக்கும் இடையே வன்செயல்கள் வெடித்துள்ளன.

நபீஸ் என்ற இடத்துக்குச் சமீபமாக நடந்த மோதவில் ஒரு பலஸ்தீனிய பிரஜை சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு முன்னர் வேறு ஒரு இடத்தில் கார் ஒன்றின் மீது இஸ்ரேலியப் படையினர் சுட்டதில் பலஸ்தீனியர் ஒருவர் உயிரிழந்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை கடற்படைத் தள தமிழ் ஊழியர்களுக்கு இடமாற்றம்?

திருகோணமலை, ஏப். 3

திருகோணமலை கடற்படைத்தளத்தில் பணியாற்றும் சுமார் 100 தமிழ் ஊழியர்களை வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்ய முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

திருமலை கடற்படைத் தளத்துக்கு அருகில் அமைந்துள்ள சீனன்குடா விமானத் தளத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கு விடுதலைப் புலிகளுக்குத் தகவல்களைக் கொடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் பணியாற்றும் தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரை விசாரணை செய்த பின்னர் கடற்படைத்தளத்தின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு அங்கு பணியாற்றும் தமிழ் ஊழியர்கள் அனைவரையும் இடமாற்றம் செய்ய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

அங்கு பணியாற்றிய சமயா சமய ஊழியர்கள் மூவர் ஏற்கனவே இடமாற்றம் செய்யப்பட்டுவிட்டனர்.

அங்கு நிரந்தரமாகப் பணிபுரியும் ஏனைய ஊழியர்களிடம், வேறு துறைமுகங்களில் சேவையாற்ற முடியுமா என்று உயர் அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

தமது குடும்பங்கள் திருமலையிலேயே வசிப்பதால் புதிய இடத்துக்கு தம்மால் இடம் மாறிச் செல்ல முடியாது என்று ஊழியர்கள் ஒருமித்து உயர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். எனினும் இந்த ஊழியர்களை வேறு இடங்களுக்கு மாற்றும் திட்டம் குறித்து கடற்படை அதிகாரிகள் தொடர்ந்தும் ஆராய்ந்து வருவதாகக் கூறப்பட்டது. (ஐ-3-150)


# முக்கிய அறிவித்தல்

## பருத்தித்துறை நகராட்சி மன்றம்

### வாளி மலகூடங்களை நீரடைப்பு மலகூடங்களாக மாற்றி அமைத்தல்

பலதடவைகள் வரியிறுப்பாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும், அவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்காத காரணத்தினால், இந்நகராட்சி மன்றம், வாளி மலகூட சேவையைத் தொடர்ந்தும் வழங்கிவருவதில் பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றது. மலகூடச்சேவைத் தொழிலாளர்களுக்குக் கடும் பற்றாக்குறை நிலவுவதோடு, சேவையிலுள்ள சிலரும் குறுகிய காலத்தினுள் இளைப்பாறவுள்ளார்கள். அத்தோடு கணிசமான தொகையினர் இந்தியாவுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இவ்வெற்றிடங்களுக்கு இளைப்பாறிய ஊழியர்கள் மீள வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள போதிலும், அவர்களது சேவையையும் தொடர்ந்து பெறமுடியாத நிலை தோன்றியுள்ளது. இவ்வெற்றிடங்களைப் புதியவர்களைக் கொண்டு நிரப்புவதற்கு நான் பல வழிகளிலும் முயற்சியெடுத்தபோதிலும், மாற்றமடைந்துவரும் சமூகப் பிரச்சினைகள் காரணமாக, இவ்வேலையைச் செய்ய யாரும் முன்வருகிறார்களில்லை. மேலும், மலம் புதைப்பதற்கெனப் பயன்படுத்தப்பட்டுவரும் இந்நகராட்சி மன்றத்துக்குச் சொந்தமான ஆனை விழுந்தானிலுள்ள பரந்த நிலமும், தற்போது இராணுவக் காவலரணுக்கு அப்பால் அமைந்திருப்பதால், அங்கு செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது.

கடந்தகாலச் சூழ்நிலைகள் காரணமாக சிமெந்து மற்றும் கட்டட நிருமாணப் பொருள்களை முன்னர் பெற்றுக்கொள்வது சிரமமாக இருந்தது. ஆனால், தற்போது அவை பெற்றுக்கொள்ளக்கூடியனவாயுள்ளன. எனவே முதற்படியாக விசாலமான இடப்பரப்பைக் கொண்ட குடியிருப்புக்கள் அமைந்துள்ள மாதனை, தும்பளை, தம்பசிட்டி, ஆத்தியடி போன்ற பகுதிகளிலும், ஏனைய இடவசதி கொண்ட இடங்களிலும் வசிப்போர், இவ்வாண்டு யூன் மாதம் 30 ஆம் திகதிக்குள் தமது வாளி மலகூடங்களை நீரடைப்பு மலகூடங்களாகமாற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன் இத்திகதிக்குப் பின்னர், இப்பகுதிகளில் மலகூட சேவையை நிறுத்த நேரிடும் என்பதையும், வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேற்குறித்த பகுதிகள் தவிர்ந்த இடங்களிலுள்ளவர்களும், மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு, மேலும் மூன்றுமாத காலத்துக்குள், அதாவது இவ்வாண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள், நீரடைப்பு மலகூடங்களை அமைக்க அல்லது அதற்கு மாற்றீடான நவீன அமைப்பு முறையை ஏற்படுத்த, ஆவன செய்வதுடன், இது காலத்தின் கட்டாயம் என்பதனை மனதிற்கொண்டு, நகரத்தினதும். நகரமக்களினதும் எதிர்கால நன்மையையும், சுபீட்சத்தையும் கருத்திற் கொண்டு, ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

வாளி மலகூடங்கள் அமைந்திருந்த பல நகரங்களிலும், நீரடைப்பு மலகூடங்கள் அமைக்கப்பட்டு, வாளி மலகூட சேவை நிறுத்தப்பட்டிருக்கும்போது, கல்வி மான்களைக் கொண்ட, வடமராட்சியில் அமைந்துள்ள, இந்நகராட்சி மன்றம் மட்டும், வாளி மலகூட சேவையைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருவது, சுகாதாரக் கேடான விடயம் மட்டுமன்றிப் பிறரது நகைப்புக்கிடமான விடயமுமாகும்.

அகில உலகமும் இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி முன்னேற்றகரமான பாதையில் வீறுநடை போடும்போது, நாம் மட்டும் பத்தொன்பதாம் நூற்றாண்டு வாழ்க்கையை வாழவிரும்புவது, ஏற்புடையது அல்ல என்பதை, இந்நகராட்சி மன்றத்தின் வரியிறுப்பாளப் பெருமக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வரென்பது எனது மனப்பூர்வமான நம்பிக்கை.

எனவே, இவ்விடயத்தில் முழுமையானபங்களிப்பை வழங்கி 30-09-1997ஆம் திகதியுடன் வாளி மலகூட சேவைக்கு முற்றுப்புள்ளி வைக்க எனக்குப் பூரண ஒத்தழைப்பு நல்குமாறு, அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். இதுதொடர்பான நடவடிக்கையைவரியிறுப்பாளர்கள் ஆரம்பிக்கும் போது இந்நகராட்சி மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு ஏற்ற நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க. சண்முகநாதன்,**
**செயலாளர்,**
**நகராட்சிமன்றம், பருத்தித்துறை.**

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
27 - 03 - 1997 (சி-414)


## 56 பொலீஸார் இடை நிறுத்தம்

கொழும்பு, ஏப்.3

மொனறாகலை பொலீஸ் அத்தியட்சகர் பிரிவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம் மாற்றம் செய்யப்பட்ட 56 பொலீஸ் கான்ஸ்டபிள்கள் கடமையை ஏற்பதற்காக யாழ்ப்பாணம் செல்ல தவறியதால் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (உ-5)

## படகு தகர்ப்பு?

புல்மோட்டைப் பகுதியிலிருந்து முல்லைத்தீவை நோக்கி வெடிமருந்துகளை ஏற்றிக் கொண்டு சென்றுகொண்டிருந்த புலிகளின் வேகப் படகு ஒன்றை செவ்வாயன்று அதிகாலை2 மணியளவில் கொக்கிளாய்க் கடற்பிரதேசத்தில் வைத்து கடற்படையினர் தகர்த்தனர் என்றும்—

இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் ஐவர் உயிரிழந்ததாகவும்—

பாதுகாப்பு வட்டாரங்கள் செவ்வாயன்று தெரிவித்தன. (உ-5)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 3

பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கான 16 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத் தலைவர் திரு. ச. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 3

ஊர்காவற்றுறை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை சங்கத்தின் உபதலைவர் திரு.க. கனகராசா தலைமையில் சங்கப் பணிமனையில் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 3

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். (ஐ-4)

# செய்திச் சாரம்

## தங்கப் பதக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 3

சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயில் சப்பறத் திருவிழாவின் போது தண்டிகை, மயில், சோடனை, அலங்காரப் பந்தல் அமைப்புக்களை கலை நுணுக்கத்துடன் அமைத்த மாவிட்டபுரம் வரதராசாவின் சேவையைப் பாராட்டி தேவஸ்தானம் தங்கப்பதக்கம் அணிவித்து அவரைக் கௌரவித்தது (இ)

## மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கம்

தென்மராட்சி, ஏப். 3

சரசாலை தெற்கில் மாதர் கிராமிய அபிவிருத்திச்சங்கம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ. பரராஜசேகரம் இதனை ஆரம்பித்து வைத்தார். (இ-117)

## அச்சுவேலி கிழக்கு பரவைக் கடலில் இறால், நண்டு

அச்சுவேலி, ஏப். 3

அச்சுவேலி கிழக்குப் பகுதியில் உள்ள பரவைக்கடலில் இறால், மீன், நண்டு வகைகளைப் தற்போதுபிடிக்கப்படுகின்றன.

அனுமதி பெற்ற மீன்பிடி தொழிலாளர்கள் கண்டி கட்டியும்; வீச்சுவலை வீசியும் இறால், மீன், நண்டு வகைகளைப் பிடித்து விற்பனை செய்கின்றனர்

பரவைக்கடல் மீன்வகைகள், இறால் என்பன விற்பனைக்கு வந்ததை அடுத்து மீனின் விலை குறைந்துள்ளது. (ஐ-11)

## இலவசமாக 5 கிலோ அரிசி

குருநகர், ஏப். 3

கடந்த மாதம் 17 ஆம் திகதி குடாக்கடலினூடாக வன்னியில் இருந்து குருநகர் பகுதிக்கு வந்து அகதி முகாமிலிருந்து தமது இல்லங்களில் குடியேறி வாழ்ந்து வரும் குருநகரைச் சேர்ந்த அனைத்து அகதிக் குடும்பக்களுக்கும் குடும்பமொன்றுக்கு ஐந்து கிலோ அரிசி இலவசமாக வழக்கப்பட்டுள்ளதாக குருநகர் கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கம் தெரிவித்தது.

## பளைப் பிரதேச விசேட அ. அட்டை

பளைப் பிரதேசத்தில் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த 2 ஆயிரத்து 400 பேரில் இதுவரை ஆயிரத்து 339 பேரின் விசேட அடையாள அட்டைகள் பளைப் பிரதேச செயலகத்துக்கு கிடைத்தன. அவை அந்தந்த கிராம அலுவலர்கள்மூலம் வழங்கப்பட்டதாக பிரதேச செயலக அடையாள அட்டைகள் பிரிவினர் தெரிவித்தனர். (இ-117)

## நல்லின மாதுளை நாற்று

செம்பியன்பற்று, ஏப். 3

அம்பன் விவசாய பீடத்தில் நல்லின மாதுளை நாற்று விநியோகிக்கப்படவுள்ளது.

எனவே மாதுளை நாற்று தேவைப்படுவோரை உடன் தொடர்பு கொள்ளுமாறு அம்பன் விவசாயபீட போதனாசிரியர் எஸ். பொன்னுத்துரை கேட்டுள்ளார்.

## பிரிவுபசாரம்

வடமராட்சி, ஏப். 3

கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரியில் 18 ஆண்டு காலம் ஆசிரியப்பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள சி. நவரத்தினத்துக்கு கல்லூரி அதிபர் ஆசிரியர்கள், மாணவர்களினால் பிரிவுபசாரமளிக்கப்பட்டது. (இ-173)

## ஆலய திருத்த வேலைகள்

யாழ்ப்பாணம், ஏப். 3

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் போது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய திருத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

எதிர்வரும் ஜூன் மாதம் நடுப்பகுதியில் நடைபெறும் அந்தோனியார் திருநாளுக்கு முன்னதாக திருத்த வேலைகள் முடிவடையும் என பங்குத் தந்தை சாள்ஸ் கொலின் தெரிவித்தார். (இ-173)

## அராலிப்பகுதியில் உருளைக் கிழங்கு நல்ல விளைச்சல்

நீண்ட காலத்தின் பின்னர் அராலியில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்கு நல்ல விளைவைக்கொடுத்துள்ளது. ஓர் அந்தருக்கு 8 முதல் 9 அந்தர் விளைவை விவசாயிகள் பெற்றுள்ளனர்.

## மார்ச் மாத வவுச்சர் இன்னும் இல்லை

தென்மராட்சி, ஏப். 3

உள்ளூராட்சி ஓய்வூதியர்களின்மார்ச்மாத வவுச்சர்கள் இன்னமும் கிடைக்கவில்லை. இந்த வவுச்சர்கள் கொழும்பிலிருந்து ஓய்வூதியர்களுக்கு அனுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ-117)

## காய்ச்சலுக்கு இளம் பெண் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 3

ஒரு வாரத்துக்கு மேல் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இளம் பெண் ஒருவர் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

இளவாலையில் இருந்து இடம் பெயர்ந்து உரும்பிராய் வடக்கில் வசித்து வந்த ஐபாத்துரை செல்வரஞ்சினி (வயது17) என்பவரே மரணமானவராவார்.

## முதியோர் இல்லம்

சாவகச்சேரி, ஏப். 3

சாவகச்சேரியில் எமிலி ஏனர்ஸ் ரைன் ஞாபகார்த்தமாக முதியோர் இல்லம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு, சாவகச்சேரி 'அசெம்பிளி ஒப்கோட்' சபையின் அருட் திரு. ஜோன் செல்வராசா தலைமையில் இடம் பெற்றது.

சாவகச்சேரி நகரசபை செயலர் சி. நடராசா நாடாவை வெட்டி இதனைத் திறந்து வைத்தார்.

## துறவறவாழ்வின் பொன் விழா

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி என்பனவற்றின் முன்னாள் அதிபரான அருட்திரு யோன் பிரான்சிஸ் அடிகளார் தமது துறவற வாழ்வின் பொன் விழாவை அண்மையில் கொண்டாடினார்.

பாஷையூர், மிருசுவில், ஏழாலை, கரவெட்டிப் பங்குகளில் சிலகாலம் பணிபுரிந்த இவர் 1947 இல் குருப்பட்டம் பெற்றார்.

இவர் கத்தோலிக்க பாடசாலைகளின் பிரதி பொது முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார். (இ-173)

## பொதுச்சபைக் கூட்டம்

யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9,30 மணிக்கு மேற்படி சங்கத்தின் தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் தலைவர் திரு. ச. த. கணநாதன் தலைமையில் நடைபெறும். புதிய இயக்குநர் சபை உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவர். (ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா. தூதரக உதவியுடன்

# கால்நடைச் சங்கங்களுக்கு கோழிக் குஞ்சுகள் விநியோகம்

வலிகாமம் தெற்கு ஏப்.3

யாழ். மாவட்டத்தில் கால் நடை வளர்ப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கோழிக்குஞ்சு வளர்ப்புக்கு ஊக்கமும் உதவியும் வழங்க அகதிகளுக்கான. ஐ.நா. தூதரகம், முன்வந்துள்ளது.

குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு கால்நடை வைத்தியர் பிரிவுகளிலும் இயங்கும் கால் நடைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தொடர்ச்சியான அபிவிருத்தித் திட்டமாக இதனைச் செயற்படுத்த உள்ளாது.

கால் நடைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் இவ்வுதவிகளைப் பயன்படுத்தி சங்கங்கள் பணம் சம்பாதித்துக்கொள்ளவும்-

அதனை மூலதனமாகப் பயன்படுத்திதொடர்ந்து திட்டங்களை நடைமுறைப் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பணியினை ஐ. நா. தூதரகம் கடந்த மார்ச் 25 ஆம் திகதி ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக- யாழ்ப்பாணம், கோப்பாய், தெல்லிப்பழை, சங்கானை, வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, வேலணை, பருத்தித்துறை ஆகிய எட்டுப் பிரிவுகளிலும் இயங்கும் கால் நடை கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒவ்வொரு சங்கத்துக்கும் தலா 225 கோழிக்குஞ்சுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

அத்துடன் கோழிக்குஞ்சுகளை வளர்ப்பதற்கு ஏற்ற கூடுகள், உபகரணங்கள், உணவு வகைகள் என்பனவற்றையும் நிறுவனம் இலவசமாக வழங்கி உள்ளது.

ஒரு மாதம் வரை சங்கங்கள் கோழிக்குஞ்சுகளை வளர்க்கவும்-

அதன்பின் அவற்றை குறைந்த விலையில் பொது மக்களுக்கு விநியோகிக்கவும் உள்ளன.

முதற்கட்ட விநியோகம் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டது.

(ஐ-152)

## சீருடைக்கு கட்டணம்

யாழ்ப்பாணம் ஏப்.3

யாழ். அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர்களால் நடத்தப்படும் பாலர் பாடசாலை மாணவருக்கு கட்டணம் அறவிட்டே சீருடை வழங்கப்படுவதாக நிர்வாகத்தினால் அறிவிக்கப்படுகிறது.

மாணவருக்கான சீருடை இலவசமாக வழங்கப்பட்டதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

## பஸ்களில் திடீர் சோதனை

வடமராட்சி ஏப். 3

வடபிராந்தியபோக்குவரத்துச் சபை பஸ்வண்டிகளில் பயணம் செய்யும் பயணிகளிடம் உள்ள டிக்கட்டுக்களை திடீர் பரிசோதனைக் குழுவினர் பரிசோதனை செய்து வருகின்றனர்

குடாநாட்டில் அனைத்துப் பாதைகளிலும் சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகளிலும் இத் திடீர் பரிசோதனைக் குழுவினர் சோதனை செய்து வருகின்றனர். (ஐ-173)

## சுன்னாகம் வங்கிக் கிளை பழைய இடத்தில்

வலிகாமம் பகுதி மக்களின் மீள் குடியமர்வின் பின்னர் சுன்னாகம் பாதுகாப்பு அரண் பகுதிக்குள் தற்காலிகமாக இயங்கி வந்த இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை மீண்டும் அதன் பழைய கட்டடத்தில் இயங்கத்தொடங்கியுள்ளது. கடந்த வாரம் முதல் வங்கி நடவடிக்கைகள் யாவும் பழைய கட்டடத்தில் வைத்தே செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஐ-152)

## தவறவிட்ட கடவுச் சீட்டுக்கள்

யாழ். சிவில் நிர்வாக அலுவலகப் பகுதியில் பயணிகள் இருவரால் தவறவிடப்பட்ட கடவுச்சீட்டுக்கள் சிவில் நிர்வாக அலுவலக அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

செல்வி.காந்தியோசவ் (இலக்கம் ஈ 178145) திருமதி அருணகிரிநாதன் ஈஸ்வரியம்மா (இலக்கம் கே. 0241939) ஆகிய இருவரது கடவுச்சீட்டுகளும், எஸ். ஐ.சுப்பிரமணிய ஐயர் என்பவரின் ஓய்வூதிய பதிவுப்புத்தகமும் தம்மிடம் உள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் உரிய அடையாளம் காட்டி இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் சிவில்நிர்வாக அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

(ஐ-3)

## கொடிகாமத்தில் புகையிலை கொள்வனவு

புகையிலை அறுவடை ஆரம்பித்திருப்பதை அடுத்து பிரதி வெள்ளிக்கிழமைகளில் கொடிகாமம் சந்தையில் பெருமளவு புகையிலை விற்பனைக்குக் கொண்டு வரப்படுகிறது.

இவற்றைக் கொள்வனவு செய்வதற்காக ஏனைய பகுதிகளிலிருந்து வாகனங்களில் வர்த்தகர்கள் முண்டியடித்து வருவதாக கொடிகாமம் சந்தை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

(ஐ-117)

## மரியாயின் சேனை கூட்டம்

கொழும்புத்துறை, ஏப். 3

யாழ். மரியாயின் சேனையினரின் கூட்டம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிமுதல் பொதுநிலையினர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-30)

வடமராட்சிக் கோட்டத்தில்

# 6 ஜி.சீ.ஈ. மாணவருக்கு புலமைப் பரிசில்கள்

வடமராட்சிக் கோட்டத்தைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. (உயர்தர) கல்வியைத் தொடரும் 6 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்க கொழும்பு ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் உப-தலைவர் தவத்திரு.சுவாமி ஆத்மகணானந்த மகராஜ் முன்வந்துள்ளார்.

இத்தகவலை அவர் பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச் சிரமத்துக்கு அனுப்பியுள்ளார்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள கல்வியைத் தொடர விரும்பும் வசதி குறைந்த மாணவர்கள் இந்தப் புலமைப்பரிசிலை பெற விரும்பினால், பாடசாலை அதிபரின் சிபார்சுடன் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஐ-3)

# நகரைச் சுத்திகரிக்க ஈ.பி.டி.பி திட்டம்

யாழ். நகரத்தை அழகுபடுத்தும் வகையில் நகரைச் சுத்திகரிக்கும் செயற்திட்டம் ஒன்றை யாழ். ஈ.பி.டி.பி அலுவலகம் நடைமுறைப் படுத்தவிருக்கிறது.

யாழ். நகரப் பகுதியில் கொட்டடி சத்திரச் சந்தியில் இருந்து இலங்கை வங்கி வரையான ஆஸ்பத்திரி வீதிப் பகுதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதிகளில் கழிவுப் பொருள்கள் தேங்குவதைத் தடுத்து அவற்றை அகற்றி சுத்திகரித்து அழகுபடுத்த இத் திட்டம் செயற்படுத்தப்படவிருக்கிறது.

இதேவேளை — பெரியோர்களின் 20 சிலைகளை நகரில் நிறுவவும் அந்த அமைப்பு திட்டமிட்டுள்ளது.

(ஐ-3)


பருத்தித்துறை

மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

175-ம் ஆண்டு விழா

1823 - 1997

ONWARD UPWARD TOWARDS THE LIGHT

POINT PEDRO

METHODIST GIRLS' HIGH SCHOOL

எமது பாடசாலையின் 175 ஆம் ஆண்டு விழா மலருக்கு பழைய மாணவிகள், பெற்றோர், நலன் விரும்பிகளிடமிருந்து பின் வரும் விவரங்களை எதிர் பார்க்கின்றோம்.

(அ) பாடசாலையின் வரலாற்று நிகழ்வுகளும், விவரங்களும்.

(ஆ) 175 ஆண்டுகால நினைவுச்சின்னங்களும், தகவல்களும்.

(இ) சாதனை படைத்த மாணவிகளும்,சாதனைகளும். (படங்கள், பத்திரிகைத் துணுக்குகள் உட்பட ஆவணங்களிருப்பின் விருப்பத்தக்கது)

(ஈ) மலருக்கான விளம்பரங்களையும், அன்பளிப்புகளையும் வழங்க விரும்பும் முன்னோடிகளின் விவரங்கள், இவ் விழாவுக்கான பல்வேறுவகையான உதவிகள், ஆலோசனைகளை வழங்கக் கூடிய அனைவரையும் அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தலைவர்

பாடசாலை அபிவிருத்திச் சபை

(சி-412)



இதய அஞ்சலி

எமது நண்பன்

செல்வன் மயூரனனின்

அன்புத் தந்தையாரான

01 - 04 - 97 இல் அமரத்துவமடைந்த

வல்லிபுரம் சற்குணானந்தசோதி

அவர்களின் ஆத்ம சாந்திக்காகவும், அன்னாரின் குடும்பத்தாரின் மனச்சாந்திக்காகவும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

யாழ். இந்து சகபாடிகள்

(9459) (க. பொ. த. (உ/த) 96)



பாராட்டுக்கள்

யாழ். கல்வி வலயம் 1 இன் உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடம் பெற்றமைக்காக —

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் 19 வயது, 15 வயதுப் பெண்கள் அணிகளையும்,

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 19 வயது ஆண்கள் அணியையும்,

கரப்பந்துப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற—

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தின் 19 வயது ஆண்கள் அணியையும்—

பாராட்டுவதுடன் அதிபர்கள், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

கோட்டக் கல்வி அலுவலர்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
அலுவலக உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள் மற்றும்
சேவைக்கால ஆலோசகர்கள்.

(சி/415)



விசேட அடையாள அட்டை ரூபா 35/-

அடையாள அட்டை ரூபா 35/-

எல்லா அளவு கறுப்பு வெள்ளைப் படங்களுக்கும் நாடவேண்டிய இடம்:

த ஸ்ருடியோ

பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(46132)



தேவை

தேநீர் தயாரிப்பாளர் ஒருவர் உடன் தேவை. அனுபவம் உள்ளவர் சுய விவரத்துடன் பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலியில் தொடர்பு [illegible]



வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் (பிரிவு 268) இன் பிரகாரமான

அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆகவே கட்டடங்கள் கட்டுவதற்கும், பழைய கட்டடங்களைப் புதுப்பிப்பதற்கும் பிரதேச சபையில் இருந்து பெறப்படும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சாவகச்சேரி பிரதேச சபை விசேட ஆணையாளரின் அங்கீகாரம் பெறுதல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன். மேலதிக விவரங்கள் சாவகச்சேரி பிரதேச சபை தலைமைப் பணிமனையிலும் உப அலுவலகங்களிலும் அறியலாம்.

ஒப்பம்: பு. சுந்தரம்பிள்ளை.
விசேட ஆணையாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

கமநல சேவை நிலையக்கட்டடம்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

1997 - 03 - 31 [சி/ 416]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### ஜோதிடம்

விவாகத்தடை, பிரயாணத் தடை, கல்வித் தடை, குடும்பப் பிரச்சினை தீர, பிரிந்தவர் சேர ஆலோசனை வழங்கப்படும்; பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஜாதகத்துடன் வரவும், குருக்கள், பொய்யாமொழி ஜோதிடம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர்.
(46086)

### தவறிவிட்டது

சதாசிவம் சிவராசன் ஆகிய எனது அடையாள அட்டை இலக்கம், 732943366V K.K.S. வீதிக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிறிசிவா றேட்ஸ் - மிதிவண்டி உதிரிப்பாக விற்பனை நிலையம், 72, கஸ்தூரியார் வீதி (யாழ்ப்பாணம்) யில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [9458]

25-3-97 ஆம் திகதி பருத்தித்துறை கப்பல் பயண பஸ்ஸில் ஆலய பட்டுக்களுடன் பயணப் பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த. அருந்தவராணி, ராணிபவன் உடுப்பிட்டி வடக்கு, வல்வெட்டித்துறை என்ற முகவரிக்குத் தொடர்பு கொண்டால், சன்மானம் வழங்கப்படும். த. அருந்தவராணி.
[சி/411]

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

திருமதி திருஞானசம்பந்தனின் காசோலை ஒன்று கோண்டாவில் பாதுகாப்பு நிலையத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரங்காட்டி பெற்றுக் கொள்ளவும். தொடர்பு முகவரி: மகாத்மா அச்சகம் இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர் மடம்.
[9455]

### வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அண்மையில், பழம் றோட்டில் சகல வசதிகளுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:- ந. யோகேந்திரன், நகர சபை, சாவகச்சேரி.
[சி/399]

### நூலலயம்

'நூலகம் அறிவின் தாயகம்' ஈழத்து - தமிழகப் படைப்பாளிகளின் புதிய வெளியீடுகளை வாசித்துப் பயனடைய விஜயம் செய்யுங்கள்: லிங் லெண்டிங் லைப்ரறி Ling Lending Library, சாவகச்சேரி.
(45932)

---

## பூபாள ராகங்கள்
## ஒத்திவைப்பு

யா/கம்பர்மலை அ.த.க. பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால் எதிர்வரும் 05-04-97 அன்று நடத்தப்படவிருந்த ''பூபாள ராகங்கள்'' நிதியுதவி நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது என்பதை தயவாய் அறியத் தருகின்றோம். மறுதேதி விரைவில் பத்திரிகை மூலம் அறியத்தரப்படும். சிரமங்களுக்கு மன்னிக்கவும்.

**பழைய மாணவர் சங்கம்**
**யா/கம்பர்மலை அ.த.க. பாடசாலை**

(46111)

---

## இன்று முதல்
**(03 - 04 - 1997 வியாழன்)**
## விற்பனை ஆரம்பம்

தங்களுக்குத் தேவையான காகிதாதி வகைகளைப் பெற்றுக்கொள்ள வாருங்கள்:

## காந்தளகம்

**41, தபாலக வீதி,**
**சாவகச்சேரி.**

(46103)

---

## பொன்னான வாய்ப்பு
## அஷ்டலக்ஷ்மி தினத்தாள் புளொக்

சகாயவிலை ரூபா 50/-
(1-4-97 தொடக்கம் 14-4-97 வரை)
எல்லா விவரங்களும் அடங்கிய கொம்பியூட்டர் கொழும்புத் தயாரிப்பு.

**கிடைக்குமிடங்கள்:**
அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
41, கண்டி வீதி, கைதடி.
சிவசக்தி அறிவொளி புத்தக நிலையம்
கைதடிச் சந்தி.
(46088)

---

## வெளிவந்து விட்டது

புதிய
சுகாதாரக்கல்வி
**வினாவிடை**
**ஆண்டு 8**
விலை ரூபா 45/-
வெளியீடு:
**ஸ்ரீ சுப்பிரமணிய**
**புத்தகசாலை,**
யாழ்ப்பாணம்.
(46099)

---

## யா/வேலாயுதம் ம.வி.
பருத்தித்துறை
## முறைசாராக் கல்வி பிரிவு

**வானொலி, ரி.வி. பராமரிப்பு**

தகுதி:- பாடசாலையை விட்டு நீங்கிய இருபாலாரும் பயிற்சி பெறத் தகுதி உடையவர்கள். போதனாசிரியர்களும் போதனாசிரியர் பதவிக்காக விண்ணப்பிக்கும்படி கோரப்படுகிறார்கள்.

விண்ணப்பிக்கும் முடிவு திகதி: **10 - 04 - 97**
நேர்முகப் பரீட்சை: **11 - 04 - 97**

**அதிபர்**

யா/ வேலாயுதம் ம.வி.
பருத்தித்துறை.
(சி/413)

---

## மானிப்பாய் மகளிர் கல்லூரி
### முறைசாராக் கல்வி மொழித்திறன் அபிவிருத்திப் பயிற்சி - 1997

**தமிழ்-தட்டச்சு, சுருக்கெழுத்து**


ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப் பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் இதற்குரிய விண்ணப்பங்களைத் தாமே தயாரித்து எதிர்வரும் 10 - 04 - 97 ஆம் திகதிக்கு முன்பதாக அதிபருக்கு அனுப்புதல் வேண்டும். நேர்முகப்பரீட்சை 12 - 04 - 97 இல் நடைபெறும்.

**அதிபர்.**

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய்.
(46130)

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்
# அந்தியேட்டி அழைப்பும்



| சிவலிங்கம் திருச்செல்வம் | திருச்செல்வம் கமலேந்திராணி (குமுதினி) | திருச்செல்வம் கம்சினி |
|---|---|---|
| தோற்றம்: 08-02 1972 | தோற்றம்: 23-06-1974 | தோற்றம்: 05-06-1996 |
| | மறைவு: 10-02-1997 | |

அழகிய இளங்குருத்தே! எங்கள் அன்பின் திருவிளக்கே!
உனை பாசமென்ற நெய்யூற்றி பகலிரவாய் வளர்த்திருந்தோம்
ஏற்றிவைத்த தீபங்கள் — நீவிர் இடையினிலே அணைந்தீரே!
இல்லறத்தில் நீர் இணைந்து இரண்டாண்டு ஆகவில்லை,
காலனவன் கடலினிலே கவர்ந்தானே உங்கள் உயிரை,
கல் மனதும் கலங்குமப்பா, எப்போ இனி உமைக் காண்போம்?

நாளை (04-04-97) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்**

க. சிவலிங்கம் (தந்தை)
கதிரிப்பாய், அச்சுவேலி.
(9449)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்
## நன்றி நவிலலும்



| அன்னையின் மடியில்: | ஆண்டவன் மடியில்: |
|---|---|
| 13 — 04 — 1939 | 04 — 03 — 1997 |

## அமரர் சுப்பையா இராசரத்தினம்
(காப்பாளர், இ.போ.ச., காரைநகர்ச் சாலை)

குடும்பத்தின் ஒளிவிளக்காய் சுடர்விட்ட எம் தந்தையே!
மண்ணுலகை விட்டு விண்ணுலகுக்குப் பறந்து
சென்றுவிட்டீர்களே!
இன்பத்திலும் துன்பத்திலும் ஆறுதல் கூறி
உங்களைப் போல்
பரிவுகாட்ட ஈடாக இங்கு எமக்கு யாருமில்லை,
ஆறாத்துயரில் எம்மை எல்லாம் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொண்டு திங்கள் ஒன்று மறைந்தாலும்
உங்களின் நினைவலைகள் அணையாத தீபமாக
என்றும் எம் உள்ளங்களில் நிலைத்து நிற்கும்.

அன்னாரின் இறுதி அஞ்சலியிற் கலந்து எமக்குப் பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், விசேடமாக இ.போ.ச. உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரது இல்லத்தில் இன்று (03-04-1997) நடைபெறும் அந்திசாஸ்திரக் கரும காரியங்களிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களையும் விசேடமாக இ.போ.ச. உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அவர் பிரிவால் துயருறும்:
**அன்பின் தாய், மனைவி,**
**பாசமிகு பிள்ளைகள், மருமகன்.**

24, புறாடி ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(9454)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மறுபரிசீலனை செய்க

'மேர்லின்' என்ற அமைப்பு சர்வதேச அவசர மருத்துவ உதவி நிறுவனமாகும். இது அரச சார்பற்ற பிரிட்டிஷ் மருத்துவ அமைப்பு.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று 'மேர்லின்' அமைப்பு யாழ்ப்பாணத்தில் தனது மனித நேயப் பணியை, மனிதாபிமான உதவியைச் செய்ய முன்வந்தது.

ஆனால் அந்த உதவி அமைப்பு தனது உதவிச் செயற்பாடுகளுக்காக மேற்கொண்ட முயற்சிகள் அரச அதிகாரிகளின் ஏனோ தானோ என்ற போக்கினால் கடந்த வருடத்தில் கைகூடவில்லை.

1996 ஏப்ரல் மாதத்தில் கொழும்பு வந்திருந்த 'மேர்லின்' பணியாளர்கள், யாழ்ப்பாணம் வர முடியாத நிலையில் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

எனினும் மேர்லின் நிறுவனத்தினர் கோபித்துக் கொள்ளவில்லை. யாழ்ப்பாண மக்களுக்கு உதவுவது என்ற தமது இணக்கத்தை முறிக்கவில்லை. இப்பகுதி மக்களுக்கு எவ்வென்ன வகை உதவிகள் தேவைப்படுகின்றன; தம்மால் உதவி செய்யக்கூடிய துறைகள் எவை; என்று நேரில் கண்டறிய விரும்பினர்.

இதன் பொருட்டு இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகப் பிரதிநிதி 1996 நவம்பரில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் தாம் நேரில் கண்ட வசதிக்குறைவுகளையும், தேவைகளையும் அடிப்படையாக வைத்து உதவித்திட்டம் ஒன்றைத் தயாரித்தார்.

அதன் பிரகாரம் சுகாதார அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் "மேர்லின்" அமைப்புத் தனது மருத்துவப் பணிகளை ஆற்றுவதற்கு அரசு (பாதுகாப்பு அமைச்சு) மீண்டும் அனுமதி வழங்கியது.

உதவித் திட்டத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு 'மேர்லினின்' ஸ்தாபகரே இங்கு வந்திருந்தார். அதன் பின்னர் உதவித் திட்டத்துக்கான ஆயத்த வேலைகள் நடந்துள்ளன. பழைய படி வேதாளம் முருங்கை மரத்தில் என்றவாறு அரசு அதிகாரிகள் மீண்டும் தடங்கல் போட்டு விட்டனர்.

மேர்லின் தொண்டர் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் வானொலித் தொலைத் தொடர்புக் கருவியைப் பயன்படுத்த பாதுகாப்பு அமைச்சு (அரசு) அனுமதி மறுத்து விட்டது.

அதனால் யாழ்ப்பாண மக்களுக்கு கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத பரிதாப நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த வாரத்தில் வானொலிக் கருவியைப் பயன்படுத்த அனுமதி கிடைக்காவிடில் 'மேர்லின்' அமைப்பின் உதவி யாழ்ப்பாணத்துக்கு கிடைக்காது.

புண்ணுக்கு வலியா அல்லது மருந்துக்கு வலியா? 'மேர்லின்' மருந்தாக வந்து தானாக உதவ முன்வந்த போது அதனை உதைத்துத் துரத்துவது என்ன தர்மம்?

அரசாங்க அதிகாரிகளின் இந்தப் போக்கு தமிழர்கள் மீது அவர்களுக்கு எந்தளவுக்கு அக்கறை உண்டு என்பதனை அம்பலமாக்குகின்றது. தேடி வந்த சீதேவியை துடைப்பத்தால் அடித்து விரட்டும் மூதேவித் தனம் தமிழர்களுக்கு உதவக் கூடாது என்பதால் தானோ......?

அரசாங்கம் இது குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

## மெய்வல்லுநர் அலுவலருக்கான பரீட்சை யாழ்ப்பாணத்திலும்

யாழ்ப்பாணம், ஏப் 3

மெய்வல்லுநர் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்றோரைத் தெரிவு செய்வதற்கான பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்துவதற்கு ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்திருப்பதாக அறியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இப்பரீட்சைக்குத் தோற்றுவோரின் வசதி கருதி இப்பரீட்சை ஏப்ரல் மாதத்திலிருந்து மே மாத இறுதி வாரம் வரை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தோற்றுவோருக்குத் தேவையான பயிற்சிக் கருத்தரங்குகள் மற்றும் வசதிகளை யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் என சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அவை பற்றிய விவரம் விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

## மின்னலுக்கு 2பேர் பலி! 13 பேர் காயமுற்றனர்

வவுனியா நகரிலிருந்து 24 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தம்மன்னலவெவ என்ற கிராமத்தில் கடந்த ஞாயிறன்று வயலில் வேலை செய்து கொண்டிருந்தோர் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியதில் இருவர் உயிரிழந்தனர்; 13 பேர் காயமடைந்தனர். காயமுற்றோரில் அறுவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் ஒருவர் ஊர்காவலர். மற்றவர் அரச ஊழியர்.

(உ-10)

### ஜி.சீ. ஈ. சாதாரண தர

## ஆங்கிலப் பரீட்சைக்கு இரு வினாத்தாள்கள்

கொழும்பு ஏப். 3

இவ்வாண்டு நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு இரண்டு ஆங்கில வினாத்தாள்களை அறிமுகப்படுத்துமாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரான சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதன்படி பொது ஆங்கில வினாத்தாளும், இலக்கணப் பகுதி வினாத்தாளும் இரண்டு பகுதிகளாக அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

பரீட்சார்த்திகள் தாம்விரும்பிய ஒரு வினாத்தாளைத் தெரிவு செய்து விடையளிக்கலாம்.

இதன்படி ஆங்கில பொது வினாத்தாளில் ஒருவர் முதலாவது அமர்வில் சித்தியடைந்திருந்தால் மற்றொரு அமர்வில் அவர் இலக்கணப்பகுதிப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

### ★ பஸ் பயணம் தாமதமடைவதால்

## நோயாளிகளைப் பார்வையிட ஆஸ்பத்திரிக்கு வருவோர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் நோயாளிகளைப் பார்வையிடுவதற்காகவும் அவர்களுக்கு உணவு அளித்துப் பராமரிப்பதற்காகவும் வடமராட்சி போன்ற தூர இடங்களில் இருந்து வரும் மக்கள் பஸ் பயணங்களில் ஏற்படும் தாமதத்தினால் உரிய நேரத்தில் ஆஸ்பத்திரியைச் சென்றடைய முடியாமல் அல்லற்படுகின்றனர்.

பருத்தித்துறையில் இருந்து முற்பகல் 11 மணிக்குப் புறப்படும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் பிற்பகல் 2.00 மணிக்கே யாழ். நகரை வந்தடைகின்றது.

ஆனால் யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளிகளைப் பார்வையிட்டு உணவு வழங்குவதற்காக நண்பகல் 12 மணி முதல் ஒரு மணி வரை மட்டுமே உறவினர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

மதிய உணவுடன் தூர இடங்களில் இருந்து வருவோர் இதனால் பெரிதும் பாதிப்படைகின்றனர். (ஐ-15)

## நோயாளரைப் பார்க்க வரும் மக்களுக்கு விசேட பஸ்சேவை

### புளொட் பிரமுகர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ். ஆஸ்பத்திரி நோயாளர்களைப் பார்வையிட்டு உணவு வழங்குவதற்காகச் செல்லும் பயணிகளின் நலன் கருதி பருத்தித்துறையில் இருந்து யாழ். நகருக்கான துரித பஸ் சேவை ஒன்று நடத்தப்படவேண்டும்.

'புளொட்' அமைப்பின் உபதலைவரான மாணிக்கதாஸன் பருத்தித்துறை இராணுவப் பொறுப்பதிகாரியான கேணல் விஜயரத்தினாவிடம் இவ்வாறு கோரியுள்ளார்.

தற்போது பருத்தித்துறையில் இருந்து பகல் 11 மணிக்குப் புறப்படும் பஸ்ஸை உரிய வேளையில் — நண்பகல் 12 மணிக்கு முன்பாக — யாழ். நகரைச் சென்றடையும் வசதியாக இராணுவப் பாதுகாப்புடன் நேரடியான விரைவு சேவையாக நடத்துவதற்கு ஆவன செய்யுமாறு அவர் இராணுவ அதிகாரியிடம் கேட்டுக் கொண்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட கேணல் விஜயரத்தினா உரிய நடவடிக்கை எடுப்பதாக மாணிக்கதாஸனிடம் உறுதியளித்தார். (ஐ)

### நாளை

**பங்குனி 22**

வெள்ளிக்கிழமை

திதி: துவாதசி

இரவு 11.46 வரை.

நட்சத்திரம்: அவிட்டம்

முற்பகல் 9.21 வரை

சுபநேரம்: 6.10-7.40

[illegible]

(... பழைய நேரப்படி)

## பழம் பெரும் சங்கத்துக்கு புத்துயிரளிக்க உதவுங்கள்

'தொன்மை மறவேல்' என்ற குறிக்கோள் வாசகத்துடன் எழுபத்தைந்தாண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்திலே ஆரம்பித்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், தமிழை மரபு முறையிற் கற்ற பண்டிதர் பலரையும் வடமொழி வல்லுநரான பண்டிதர் சிலரையும் தோற்றுவித்தது என்ற உண்மை இன்று பலர் அறியாதது.

1996 ஏப்ரல் வரை பல இன்னல்களுக்குமிடையே பிரவேச, பால, பண்டிதர்வகுப்புக்களை நடத்தியும், க. பொ. த. 'உ/த', 'சா/த' முன்னோடிப் பரீட்சைகளை [தமிழ், இந்து நாகரிகம்] நடத்தியும் அது தன்னாலியன்ற தொண்டுகளை ஆற்றி வந்தது.

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்கள [வலயம் 1] கல்விப் பணிப்பாளரைப் பதவி வழித் தலைவராகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளரைப் பதவி வழிச் செயலாளராகவும்கொண்டு தமிழ் மூதறிஞர்களான பண்டிதர்கள் சிலரைத் துணைத் தலைவர், துணைச் செயலாளர், செயற் குழுவினராகவும் கொண்டு அது இயங்கியது.

இன்று, இச்செயற் குழுவினரிற் சிலர் இவ்வுலகில் இல்லை. சிலர் நாட்டின் பல பகுதிகளிலும் சிதறிக் கிடக்கின்றனர். இதனால் தொடர்ந்தும் பணிபுரியாமல், சங்கம் முடங்கிக்கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இது மிகக் கவலை தருவதாகும்.

யாழ்ப்பாணத்துக் கல்வி வலயங்கள் தோறும் முன்பு நடந்து வந்த பண்டிதர் வகுப்புக்களை நினைவு கூர்ந்து ஆசிரியர் பலரும், மாணவர்கள் பலரும் மீண்டும் அவற்றைத் தொடங்குமாறும் சங்கத்திற்குப் புத்துயிரளிக்குமாறும் என்னை வற்புறுத்தி வேண்டுகின்றார்கள். 'தனி மரம் தோப்பாகாது'. சங்கத்தை மீட்டும் செயற்படுத்தத் தமிழ் அறிஞரதும் ஆர்வலரதும் ஒத்துழைப்பு மிகமிக அவசியமானதாகும்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில், எமது சங்கத்தின் முன்னாள் ஆலோசகரும் பரீட்சகருமாய் விளங்கிய விபுலானந்த அடிகளின் நூற்றாண்டு விழாவினைச் சங்கம் 1992 ஆம் ஆண்டில் சிறப்பாகக் கொண்டாடியது? அவ்விழாவில் எமது சங்கத்தின் உபதலைவரும், பல்துறை அறிஞரும், கவிஞருமான பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள், 'தமிழர் யாழியல்' என்ற தலைப்பில் 'ஆய்வேடு' ஒன்றினைச் சமர்ப்பித்தார். அவ்வாய்வேடு, நூல்வடிவாகி வெளியீட்டு விழாவுக்குக் காத்திருக்கின்றது.

### வாசகர் திருமுகம்

பண்டிதர் சச்சிதானந்தன் இன்று வவுனியாவில் வதிகின்றார். வெளியீட்டு விழாவினைக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையோடும், பலாலி ஆசிரியர் கலாசாலையினரின் ஒத்துழைப்போடும் கூடிய விரைவில் நடத்த எண்ணியுள்ளோம். விழாவிற் பங்கு கொள்ளப் பணடிதர் அவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளோம்.

எமது சங்க முன்னாள் செயலாளரான அமரர் இ. சிவானந்தன் (முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர். யாழ். கல்வித் திணைக்களம், வலயம் 1) அவர்களின் நினைவாக இந்நூல் வெளியாகின்றது.

வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து சங்கப் பொதுக் கூட்டத்தை நடத்தி —

அ) மீண்டும் பண்டித வகுப்புக்களை ஆரம்பித்தல்

ஆ) பரீட்சைகளை நடத்தல்

ஆகிய செயற்றிட்டங்களை நிறைவேற்றவும் சங்கத்தினோடு தொடர்பு கொண்ட பண்டிதர்கள், தமிழ் அறிஞர்கள், ஆர்வலர்களை அழைப்பதோடு, எதிர் காலத்தில் அதன் வளர்ச்சிக்கு ஆவன செய்யுமாறும் தமிழின் பெயரால் வேண்டுகின்றேன்.

க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

துணைச் செயலாளர்,
ஆரிய, திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்.

## கொழும்பு - பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்)

னர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திருமலைக்கும், கொழும்பு திருமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் கப்பல்கள் மற்றும் விமானத்தில் பயணம் செய்வோர் இப்போது பல கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். ஒரு வழிப்பயணத்துக்குப் பல மாதங்களைச் செலவிடும் அளவுக்கு நீண்ட காலதாமதமும் ஏற்படுகின்றது.

கப்பல் மற்றும் விமானப் பயணிகளின் சிரமங்களை நீக்குவது சம்பந்தமாக நேற்றைய மாநாட்டில் ஆராயப்பட்டது.

அடுத்த திங்கட்கிழமை ஏழாம் திகதி தொடக்கம் வாரத்தில் மூன்று நாள்கள் (திங்கள், புதன், வெள்ளி) கொழும்பிலிருந்து பலாலிக்கும், பலாலியிலிருந்து கொழும்புக்கும் இரண்டு தடவைகள் விமானச் சேவைகளை நடத்த முடிவாகியுள்ளது.

இப்போது ஞாயிறுதவிர்ந்த ஏனைய ஆறு நாள்களிலும் இருவழிச் சேவை ஒரு தடவை மட்டுமே நடைபெறுகிறது.

காங்கேசன்துறை—திருகோணமலை கப்பல் சேவை மேலும் ஒரு கப்பலை—ஐந்தாவது கப்பலையும்—சேவையில் அமர்த்தவும் முடிவாகியது.

இதேவேளை பயணத்தின் போது நடத்தப்படும் பாதுகாப்புச் சோதனைகளைக் குறைக்கவும், குறைந்த நேரத்தில் சோதனைகளைச் செய்யவும் நேற்றையமாநாட்டில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

விமானத்தில் பயணம்செய்வதற்காக இரத்மலானை, பலாலி விமான நிலையங்களுக்குச் செல்வோரின் பொதிகளை இரண்டு மணித்தியாலங்களுக்குள் சோதனையிட்டு முடிப்பதென்றும் நேற்றைய மாநாட்டில் இணங்கப்பட்டது.

இதேவேளை —

குடாநாட்டு மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்கள் குறித்து ஈ.பி.டி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் பி. பீ.ஸிக்குத் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையேயான விமானப் போக்குவரத்தில் பிரயாணிகளுக்கு ஏற்படும் தாமதங்கள், வசதிகள் பற்றி இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது. அவசரமான தேவைகளுக்காகப் பிரயாணம் செய்வோர், வெளிநாடுகளில் இருந்து வருவோர், வெளிநாடுகளுக்குச் செல்வோர் ஆகியோரின் பிரயாணங்களில் தாமதங்கள் ஏற்படுகின்றன. — என்றார்.

(அ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IS SECURITY A PROBLEM..?

**For Further Details Contact**
**Capt. N. Somasunderam**
(Director)
**Our Services Include the Following**

- Consultancy on all Security Functions
- Providing well Trained Security Personnel
- Investigation and Confidential Inquires.
- Training of Personnel (Commercial and Industrial)
- Fire Protection.
- First Aid.

**ARUN SECURITY SERVICE,**
337, Kasthuriyar Road,
Jaffna.


MANAGEMENT STUDENTS UNION · EFFICIENCY · ECONOMY · EFFECTIVENESS · UNIVERSITY OF JAFFNA

## வரவேற்று வாழ்த்துகின்றோம்

**யாழ். பல்கலைக்கழக**
துணைவேந்தராக நியமனம் பெற்றுள்ள
**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
அவர்களையும்;

கலைப்பீடாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள
**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
அவர்களையும்;

பதிவாளராக நியமனம் பெற்றுள்ள
**கலாநிதி க. குணராசா**
அவர்களையும்

வருக! வருக!! என வரவேற்று
ஆரோக்கியமான பல்கலைக்கழக மாணவ சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டி
வாழ்த்துகின்றோம்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(46137)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் ஐயம்பிள்ளை கந்தசாமி

(முன்னைய கிராம சபை உறுப்பினரும், முன்னாள் காரைநகர் ப. நோ கூ. சங்க நெறியாளர்குழு உறுப்பினரும்)

12 வருடகாலம் தொடர்ந்து காரைநகர் ப. நோ. கூ. சங்க நெறியாளர் குழுவில் அங்கம் வகித்தும், காரைநகர் கிராம சபையில் அங்கத்தவராக இருந்தும், பொதுமக்கள் நலன்கருதி அயராது நேர்மையான வழியில் கடமையாற்றிய காரைநகர் பெரிய மணலைச் சேர்ந்த அமரர் ஐயம்பிள்ளை கந்தசாமி அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்
**காரைநகர் ப. நோ. கூ. சங்கம்,**
**காரைநகர்.**

(46138)

## கண்ணீர் அஞ்சலி

### சி. செல்வக்குமார்

எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
திருமதி செல்வமலர் செல்வக்குமாரின்
அன்புக் கணவர்

சிவராமலிங்கம் செல்வக்குமாருக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்துகிறோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது அன்பு மனைவிக்கும் குடும்ப உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிறைவேற்றுப் பொறியியலாளரும்
அலுவலர்களும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை,
பளைப் பகுதி, யாழ்ப்பாணம். (9462)

## கப்பல் சேவை

மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் நோயாளர்களை ஏற்றிக்கொண்டு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கப்பல் ஒன்று நேற்று மாலை காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

நோயாளர்கள் யாழ். போதனாவைத்திய சாலையில் இருந்து செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளால் பஸ் வண்டி, அம்புலன்ஸ் என்பன மூலம் காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு கப்பலில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டனர். (ஐ-15)

## விடுதலையானோ...

(முதலாம் பக்கத் தொடர்)
25-9-96இல் கைதானார்.

★ ஐயாத்துரை குணராசா (38 வயது—மிருசுவில்). இவர் 25-9-96இல் கைதானார்.

★ சிவபாதம் சிவஞானம் (25 வயது—துன்னாலை தெற்கு). இவர் 22-9-96இல் கைதானார்.

★ வல்லி வர்மகுமார் (35 வயது—வீரபாதம்தோட்டம், கரவெட்டி மேற்கு). இவர் 25-10-96இல் கைதானார்.

★ நல்லதம்பி விக்கினேஸ்வரன் (23 வயது—ராஜவீதி, பால்பண்ணையடி, கோப்பாய் தெற்கு). இவர் 8-9-96இல் கைதானார்.

★ சிவகுருநாதன் அருட்செல்வம் (21வயது—கப்பூது, கரவெட்டி). இவர் 10-10-96 இல் கைதானார்.

★ மாணிக்கம் சுப்பிரமணியம் (40 வயது—திருமலை). இவர் 8-9-96இல் கிளிநொச்சியில் கைதானார். இவர் திருகோணமலையில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட விருந்தார். (இ-3)

## இ. தொ. கா. ...

(முதலாம் பக்கத் தொடர்)
ஏற்பட்ட பின் அதற்குப் பயந்து ஓடவேண்டாம்'' என்று கூட்டத்தில் கோஷங்கள் எழுந்தன.

அமைச்சர் தொண்டமான் அவரது கடிதத்தை வாங்கி வைத்துக் கூட்டத்தில் அமைதியை நிலைநாட்டினார்.

இ. தொ. காவின் செயற்குழுக் கூட்டம் உள்ளூராட்சி தேர்தல் தோல்வி குறித்து ஆராயவே கூட்டப்பட்டிருந்தது. (இ-3-150)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்)
வடமாகாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் நடத்த தேவையான முன்னோடி நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுவருகிறது.

தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைக் கோரும் திகதி எந்த நேரத்திலும் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பாரிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)
பது பகிடிக்கு இடையான செயல்.

அப்பகுதிகளில் அரசினால் தேர்தலை நடத்த முடியாமற் போகும்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நியாயமான தேர்தலை எவ்வாறு நடத்த முடியும்? அப்பகுதிகளில் தேர்தல் நடைபெறுவதாயின் அது ஜனநாயக அடிப்படையில் அமையாது — என்றார். (அ-10)


**பொஸ்கோ இன்ஸ்ரிரியூட்**
**25, நக்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**Spoken English with Grammar**
**By: BRITTO**
**பிரிவு - 4**
ஆரம்பம்: 03 - 04 - 97
(46139)


## வாழ்த்துகின்றோம்

தமிழ் மக்களின் உயர்கல்விக்கூடமான
**யாழ். பல்கலைக்கழகத்தில்**
உயர்பதவிகளில் நியமனம் பெற்றிருக்கும்
**யாழ். இந்துவின் மைந்தர்கள்**
**துணைவேந்தர்**
பேராசிரியர் **பொ. பாலசுந்தரம்பிள்ளை**
(தலைவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்)
மற்றும்
**பதிவாளர்**
**கலாநிதி க. குணராசா**
ஆகியோரை மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்!

ஹிண்டுயிட்ஸ் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம். (சி/421)

## வேம்படி மகளிர் கல்லூரியில்

33 ஆண்டு கால ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறும் கல்லூரி பிரதி அதிபர்
**செல்வி சரோ தர்மலிங்கம்**
அவர்களின்
**சேவையைப் பாராட்டி நன்றி நவில்கின்றோம்.**

மாணவியாக, சிறந்த மெய்வல்லுநர் மற்றும் விளையாட்டுத்துறை வீராங்கனையாக, விளையாட்டுத்துறை பயிற்சியாளராக, பின்னர் ஆசிரியராக, விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக, ஆங்கில ஆசிரியராக, பிரதி அதிபராக ஐம்பதுக்கும் அதிக ஆண்டுகள் கல்லூரியுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டு தேசிய ரீதியில் சாதனைகள் புரிந்த சிறந்த மெய்வல்லுநர் வீராங்கனைகளையும், விளையாட்டுத் துறை அணிகளை, ஆங்கில அறிவு மிக்க மாணவிகளை உருவாக்கித் தந்து கல்லூரியின் புகழை ஓங்கி வீச வைத்த சகோதரி-

**செல்வி சரோ தர்மலிங்கம்**
அவர்களை

அவர் அகவை அறுபது காணும் இந்தத் தினத்தில் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,
யாழ்ப்பாணம்.
(சி/420)

## இந்துவின் மைந்தர்களுக்கு

## வாழ்த்து

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்**
பழைய மாணவர் சங்கத் தலைவர்
**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
யாழ் பல்கலைக்கழக துணைவேந்தராக நியமிக்கப்பட்டதையும்;
சங்கத்தின் முன்னாள் உபதலைவரும் செயற்குழு உறுப்பினருமான
**கலாநிதி க. குணராசா**
யாழ் பல்கலைக்கழகப் பதிவாளராக பதவியேற்றதையும் இட்டு
இருவருக்கும் எமது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
(சி/423)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
**கோகுலனின் (கோபி)**
**அன்புத் தாயார்**
**திருமதி பவளம் சிவசுப்பிரமணியம்**
அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.
**மணிக்கல்வி நிறுவன,**
**மாணவ மாணவியர்கள்.**
**(ஆண்டு - 9)**
(9463)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03 - 04 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org